[பேரவைத் தலைவர்] [2021 ஆகஸ்ட் 16

திரு. அருணகிரிநாதர் அவர்கள் சைவ சித்தாந்தத்தைப் பரப்பும் ஆன்மிகப் பணியில் அருந்தொண்டாற்றியவர். அவர், பல்வேறு மக்கள் சார்ந்த பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அனைவரின் பேரன்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் ஆன்மிகப் பெருமக்களுக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10-10

3. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் இலக்கினை எய்திடும் வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் திருத்திய நிதிநிலை அறிக்கை, 2021-2022 (தமிழ் மற்றும் ஆங்கிலம்), வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021-2022 (தமிழ் மற்றும் ஆங்கிலம்), நிதிநிலை அறிக்கை தொடர்பான ஏனைய ஆவணங்கள், நிகழ்ச்சி நிரல் ஆகியன பதிவேற்றம் மற்றும் அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் (அ மற்றும் ஆ) இடம்பெறும் ஆவணங்கள் அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை எய்திட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை

மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை மின் நிதிநிலை அறிக்கைகளாக, முதல் முறையாக இப்பேரவைக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக, ஒவ்வோர் உறுப்பினருடைய மேசையிலும் வைக்கப்பட்டுள்ள Personal Computer-*உடன், விசைப் பலகை* (Keyboard) *மற்றும்* Mouse *ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன.*

கணினி திரையில் கீழ்க்காணும் icon-*களில் (1) நிதிநிலை அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், (2) வேளாண்மை நிதிநிலை அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், (3) நிதிநிலை அறிக்கை தொடர்பான ஏனைய ஆவணங்கள், (4) நிகழ்ச்சி நிரல் ஆகியன* pdf *வடிவில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைப் பார்வையிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நிகழ்ச்சி நிரலில் அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் எனும்* icon-*ல் 'அ' என்ற தலைப்பிலுள்ள சட்டமுறை விதிகளும், ஆணைகளும் மற்றும் 'ஆ' என்ற தலைப்பிலுள்ள அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள ஆவணங்களும்* pdf file *வடிவில் அவ்வப்போது பதிவேற்றம் செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்று முதல் அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளில் இடம் பெற்றுள்ள அறிவிக்கைகள் மற்றும் அறிக்கைகளின் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தில் முதல் தளத்திலுள்ள சட்டமுன்வடிவு பிரிவு-1-ல் வைக்கப் பெறுவதோடு, இவற்றின் மென்பொருள் நகல், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக, அனைத்து துறைகளால் வழங்கப்பெறும் கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் கணினி திரையில் அவ்வப்போது பதிவேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவிட, பேரவையின் அனுமதியுடன் இச்செயலக அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் அருகில் உள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*